# ***DEPOSITION OF WITNESS***
# **IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, THANJAVUR AT KUMBAKONAM**

**SC No. 232/2023**
**PW: 10**

| | | | |
|---|---|---|---|
| Name : | திரு.சுரேஷ் | Taluk : | கும்பகோணம் |
| Father's Name : | திரு. சுப்பையன் | Calling : | LW7 |
| Village : | தேனாம்படுகை | Age : | 40 |

Solemnly affirmed by Thiru.X.Gilbert Maria Julian, Bench Clerk Grade II in accordance with the provisions of The Oaths Act, 1969 (Act 44 of 1969) on the 13th day of February 2026.

Signature of Witness.

(Accused Present. Additional Public Prosecutor Present. Defence counsel present)

முதல் விசாரணை :

நான் தேனாம்படுகையில் வசித்து வருகிறேன். நான் சென்னையில் ஆசாரியாக வேலை பார்த்து வருகிறேன். சம்பவம் எந்த தேதியில், எத்தனை மணிக்கு நடந்தது என்று எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகள் அனைவரையும் தெரியும். அவர்கள் எங்கள் ஊர்க்காரர்கள். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(சாட்சி தனது வாக்குமூலத்திலிருந்து பிறழ்ந்து சாட்சியம் அளித்துள்ளதால் குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரினார். குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.)

அரசு தரப்பு குறுக்கு விசாரணை:

17.09.2021 அன்று சுமார் 8.30 மணியளவில் உடையாளூர் மெயின்ரோட்டில்

உள்ள மளிகை கடையின் முன்பு ராஜ்குமார் மற்றும் அஜீத்திற்கும், அய்யப்பனுக்கும் தகராறு ஏற்பட்டதாகவும், அந்த தகராறு தொடர்ச்சியாக ராஜ்குமார் அன்று இரவு சுமார் 1.30 மணியளவில் ஜெயக்குமார் வீட்டிற்கு சென்று ஏன் இப்படி செய்தீர்கள் என்று கேட்டபோது அங்கே வீட்டில் இருந்த அஜீத், அய்யப்பன், ஜெயக்குமார், ஜெயக்குமாரின் மனைவி வாசுகி ஆகியோர்கள் இருந்துள்ளனர். ராஜ்குமார், ஜெயக்குமாரிடம் தங்கள் மகன் ஏன் இப்படி செய்கிறான் என்று கேட்டதற்கு அஜீத் ராஜக்குமாரிடம் தகாத வார்த்தைகள் சொல்லி நான் அப்படித்தான் செய்வேன் என்று திட்டினார். உடனே ஜெயக்குமார் அவனை வெட்டி புதைங்கடா என்று சத்தம் போடவே அஜீத் அருகில் இருந்த அருவாளை எடுத்து இத்தோடுசெத்து தொலைந்து போடா என்று சொல்லி ஓங்கி ராஜ்குமாரின் பின் தலையில் வெட்டினார். ஜெயக்குமார் அருவாளால் ராஜ்குமாரை வெட்ட அவர் வலது கையால் தடுத்தபோது இடது மற்றும் வலது புறங்கையில் வெட்டுக்காயம் ஏற்பட்டது என்றும், அய்யப்பனும் இத்தோடு செத்து தொலைடா என்று தகாத வார்த்தைகள் கூறி ராஜ்குமாரின் பின் தலையில் வெட்டினார். அப்போது ஜெயக்குமாரின் மனைவி இவனை விடாதீங்கடா, அடித்து சாவடிங்களா என்று சொன்னதும் அனைவரும் ராஜ்குமாரை தாக்கியதாக நான் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :

இந்த வழக்கில் என்னை சாட்சியாக சேர்த்த விவரம் போலீசார் வந்து சம்மன் சார்வு செய்தபோது தான் தெரியும் என்றால் சரிதான்.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him to be Correct.*

*Sd/S.Mahalakshmi,*
*Chief Judicial Magistrate,*
*Thanjavur at Kumbakonam*